மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

2007–08

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசின் நிதிப்பங்கீடு

1. மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி இந்த நிதியாண்டில், தற்போதுள்ள 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக உயர்த்தப்படும். இந்த உயர்வினாலும், வருவாய் வளர்ச்சியினாலும், 2006–07ம் ஆண்டில் ரூபாய் 1,225 கோடியாக இருந்த நிதிப்பங்கீடு, 2007–08ம் ஆண்டில் ரூபாய் 1,586 கோடியாக உயரும். இதன்மூலம், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த ஆண்டில் 361 கோடி ரூபாய் அதாவது 30 சதவீதம் கூடுதலாக நிதி கிடைக்கும்.

2. குடிநீர் வழங்குதல், சுகாதாரம், சாலைகள் மற்றும் தெருவிளக்குகளை பராமரித்தல் போன்ற அடிப்படை வசதிகளை நிறைவு செய்யும் பொறுப்பு கிராம ஊராட்சிகளைச் சார்ந்தது. இதைக் கருத்தில் கொண்டு 2007–08 ம் ஆண்டு முதல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதியில் கிராம ஊராட்சிகளின் பங்கு 47 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்தப்படும். மேலும் மக்கள் தொகை

அடிப்படையில் மட்டுமே நிதிப் பங்கீடு செய்யும் போது, பல ஊராட்சிகளுக்கு போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையை மாற்ற, ஒவ்வொரு ஊராட்சிக்கும் குறைந்தபட்சமாக ஆண்டொன்றுக்கு ரூ. 3 இலட்சம் வழங்கவும், மீதமுள்ள தொகையினை மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் கிராம ஊராட்சிகள் நிதி நிலை தன்னிறைவு பெற்று, மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவு செய்ய வழி வகுக்கும்.

ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்

3. தமிழ்நாட்டிலுள்ள சுமார் 22,000 ஆரம்ப மற்றும் 4,500 நடுநிலைப் பள்ளிகளில் அனேக பள்ளிகள் பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையிலுள்ளன. இந்நிலையை மாற்றி கிராமங்களின் பள்ளிச் சூழலை சீரமைக்க இவ்வரசு 'ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்' என்ற சிறப்புத் திட்டம் ஒன்றை இவ்வாண்டு முதல் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்களில் பழுது நீக்கம் செய்யவும், வெள்ளையடித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும், தேவைப்படின், மின்வசதி செய்து, மின் விளக்குகள் மற்றும் மின்விசிறிகள் அமைக்கவும், இந்த ஆண்டு 135 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதி

4. பொதுமக்களும், அலுவலர்களும் கிராம ஊராட்சிகளுடன் தொடர்பு கொள்ள ஏதுவாக, அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் இந்த ஆண்டு தொலைபேசி வசதி செய்து தரப்படும். இதன் மூலம் கிராம ஊராட்சிகள் கணினிகள் வழியாக இன்டர்நெட் இணைப்பு பெற்று (Internet) பயன்படுத்த வாய்ப்பாக அமையும்.

சமூக பொறுப்புணர்வுடன் செயல்படும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு விருது

5. வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் தங்களது சமூக பொறுப்பின் ஒரு பகுதியாக (Corporate Social Responsibility) பாராட்டத் தக்க வகையில் பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் நடப்பாண்டிலிருந்து ஆண்டுதோறும் இத்தகைய சிறந்த நிறுவனங்களுக்கு, தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், நற்சான்றிதழும் வழங்கப்படும். இதற்காக 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

பயிற்சிக்கான நிதி மற்றும் வசதிகளை மேம்படுத்துதல்

6. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி திட்டங்கள் பற்றி பயிற்சி அளித்திட **பயிற்சி தொகுப்பு நிதி** (Training Corpus Fund) ஒன்றை ஏற்படுத்தி, அதற்காக ஆண்டுதோறும் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. சிறந்த செயல்பாடுகளை நேரில் கண்டறிவதற்கு ஏதுவாக, மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும், பிற மாநிலங்களுக்கும் பட்டறிவு பயணங்கள் (exposure visits) மேற்கொள்ளவும், இந்த நிதி பயன்படுத்தப்படும். மேலும் மாநிலத்திலுள்ள 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

வளர்ச்சித் துறை நிர்வாகத்தை நவீனமயமாக்குதல்

7. இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் பொழுதும், ஊரக வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கத்தை தீவிரமாக கண்காணிக்கவும், மாவட்ட மற்றும் வட்டார நிர்வாகங்களுக்கு இடையே தடையற்ற தகவல் தொடர்புக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு அவசியமாகிறது. எனவே, முதற்கட்டமாக 17 மாவட்டங்களில் வளர்ச்சித் துறையின் மாவட்ட மற்றும் வட்டார

அலுவலர்களுக்கு 4 கோடி ரூபாய் செலவில் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்கள் **(Wireless Sets)** வழங்கப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளில் மின்வாரியம் தொடர்புடைய பிரச்சனைகளுக்கு தீர்வு

8.1. கடந்த ஆட்சியில் தெரு விளக்கு விரிவாக்கப் பணிகளுக்கு ஒவ்வொரு பணிக்கும் தனித்தனி மதிப்பீடுகள் தயார் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டதால், புதிய மின்கம்பங்கள் அமைக்க அதிக செலவினமும், கால தாமதமும் ஏற்பட்டது. இந்நிலையை மாற்றி 13.3.2007 முதல் இப்பணிகளுக்கு நிலையான கட்டணமாக ஒரு மின்கம்பத்திற்கு ரூ.9,500 என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

8.2. உள்ளாட்சி அமைப்புகள் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் அபராத வரி 13.03.2007 முதல் 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைக்கப்படுவதோடு, அதற்கு முன்புள்ள காலத்திற்கான நிலுவையாக உள்ள அனைத்து அபராத வரித் தொகையினையும் அரசு தள்ளுபடி செய்துள்ளது.

8.3. மின்கட்டணங்களுக்கான கேட்பு பெறப்பட்ட நாளிலிருந்து 20 நாட்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகள் முழுத் தொகையினையும் செலுத்திட

வேண்டுமென்ற கால அளவை **13.3.2007** முதல் **60** நாட்களாக அரசு கூட்டியுள்ளது.

8.4. உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள அனைத்து மின் இணைப்புகளுக்கும், மீட்டர் பொறுத்துவதற்கும், ஒவ்வொரு மின்கட்டண பட்டியல் வழங்கும் போதும் ஆரம்ப மற்றும் இறுதி மீட்டர் அளவுகளை பதிவு செய்து முறையான பட்டியல் வழங்கவும் அரசு உத்திரவிட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

9. இத்திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் ரூபாய் **120** இலட்சத்தில், ரூபாய் **60** இலட்சத்தை வரையறுக்கப்படாத பணிகளுக்காகவும், மீதமுள்ள ரூபாய் **60** இலட்சத்தை வரையறுக்கப்பட்ட பணிகளுக்காகவும் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஆண்டு வரையறுக்கப்பட்ட ரூபாய் **60** இலட்சம் நிதியிலிருந்து ஊரகப் பகுதிகளில் தார்ச்சாலைகள், சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் அமைக்கும் பணிகள், நகர்ப்புற பகுதிகளில் தார்ச்சாலைகள், சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்களுடன் கூடிய கான்கிரிட் நடைபாதைகள் ஆகிய பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

10. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கடந்த ஆண்டில் 2,540 கிராம ஊராட்சிகளில் 508 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டிலும் 2,534 கிராம ஊராட்சிகளில் 507 கோடி ரூபாய் நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

11. ஊரகப் பகுதிகளில் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்படும் விளையாட்டு மையங்கள் தொடர்ந்து இயங்குவதற்கு ஏதுவாக, கிராம ஊராட்சிகள் ஆண்டுதோறும் 10,000 ரூபாய்க்கு மிகாது பராமரிப்பு செலவினம் மேற்கொள்ள அரசு அனுமதி அளிக்கிறது.

சாலைகள் பராமரிப்பு

12. 2006–07ம் நிதியாண்டில் பன்னிரெண்டாவது நிதி ஆணைய மான்யம் 103 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடைந்த சாலைகளை சீரமைத்தது போலவே இந்த ஆண்டும், 103 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

மாநில தேர்தல் ஆணையத்திற்கு புதிய கட்டிடம்

13. மாநில தேர்தல் ஆணையத்திற்கு கூட்ட அரங்குடன் கூடிய புதிய அலுவலகக் கட்டிடம் கட்ட **1** கோடியே **50** இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

சுய உதவிக்குழுக்களுக்கு அடையாள அட்டை

14. **1989**ஆம் ஆண்டில் இவ்வரசால் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள், இன்று வியக்கத்தக்க வளர்ச்சி பெற்றுள்ளன. இக்குழுக்கள் சமுதாயத்தில் அங்கீகாரம் பெறவும், அரசு அலுவலகங்கள் மற்றும் வங்கிகளை எளிதாக அணுகி பயன் பெறவும், அனைத்து மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கும் அடையாள அட்டை அரசு செலவில் வழங்க, முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த அடையாள அட்டையில் குழு உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள், குழுவின் சேமிப்பு, கடன் மற்றும் இதர தகவல்களும் இடம் பெறும். இப்பணிக்காக இந்த ஆண்டு **2** கோடியே **50** இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழு பெண்களுக்கு அடிப்படைக் கல்வி

15. தற்போது **54** இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து நல்ல முன்னேற்றம் அடைந்து வருகின்ற போதிலும், ஊரகப்பகுதிகளில் எழுத்தறிவில்லா சுய உதவிக் குழு பெண்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் இருந்து வருகிறது. **"ஒரு பெண்ணிற்கு அளிக்கப்படும் கல்வி ஒரு குடும்பத்திற்கே அளிக்கப்படும் கல்வியாகும்".** ஆகவே சுய உதவிக்குழு பெண்களுக்கு "அனைவருக்கும் ஆரம்பக் கல்வி" திட்டத்துடன் இணைந்து, அடிப்படைக் கல்வி அளிக்க, ஒரு முன்னோடி திட்டத்தை, **1000** ஊராட்சிகளில் இந்த ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தும். இத்திட்டம் " சுயஉதவிக்குழு கல்வித் திட்டம்" என்று அழைக்கப்படும். இத்திட்டத்திற்கு **1** கோடியே **75** இலட்சம் ரூபாய் அரசால் இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக்குழு கூட்டமைப்புகளுக்கிடையே போட்டிகள் நடத்துதல்:

16. சுய உதவிக்குழு உறுப்பினர்களின் திறமைகளை வெளிக்கொணரவும், அவர்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்தவும், சுய உதவிக் குழு கூட்டமைப்புகளுக்கிடையே சமத்துவ பொங்கல் திருநாளில் பல்வேறு குழுப்போட்டிகள் நடத்தப்படும். வட்டார அளவிலும் பின்னர்

மாவட்ட அளவிலும் போட்டிகள் நடத்தி, வெற்றி பெறும் கூட்டமைப்புகளுக்கு ரொக்கப் பரிசுகளும், விருதுகளும் வழங்கப்படும். இதற்கு 1 கோடியே 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுனாமி நிவாரணப் பணிகள்

17. கடல் அலை ஏற்றத்திலிருந்து, 200 மீட்டர் தொலைவிற்குள் இருக்கும் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் மற்றும் 1000 மீட்டர் தொலைவிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள பல்வேறு அரசு திட்டங்கள் மூலம் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள வீடுகள் ஆக மொத்தம் 15869 வீடுகள் ராஜீவ் காந்தி மறுவாழ்வு திட்ட நிதியிலிருந்து 396 கோடியே 72 லட்சம் ரூபாய் செலவில் மீண்டும் கட்டித்தரப்படும். இவ்வாறு கட்டப்படும் ஒவ்வொரு வீடும் 325 சதுர அடியில் இருக்கும். மேலும் இவ்வீடுகளுக்கு தலா 40,000/– ரூபாய் செலவில் அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும்.

18. பாரம்பரியமிக்க நமது பண்பாட்டின் சின்னமாக விளங்கும் கிராம கைவினைஞர்கள் தொழில் மேம்பாட்டிற்காக, **விழுப்புரம் மாவட்டத்தில் கைவினைஞர் கிராமம்** ஒன்றும் **மாமல்லபுரத்தில் சிற்பப் பூங்காவும்** ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

நிர்வாக வசதிகள் மற்றும் பணியாளர் நலன்

19. திட்டப் பணிகளை ஆய்வு செய்து, துரிதமாகவும், தரத்துடனும் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி இயக்குநர்கள், உதவி செயற் பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள் போன்ற அலுவலர்களுக்கு 5 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் 123 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

20. ஊரக வளர்ச்சிப் பணிகளை செம்மையாக கண்காணிக்க, தற்போது வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் போதுமானதாக இல்லாததால், 2007–08ம் ஆண்டிலிருந்து, இரு வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் மாத எரிபொருள் ஒதுக்கீடு தலா 100 லிட்டரிலிருந்து 150 லிட்டராகவும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு மாத எரிபொருள் ஒதுக்கீடு 75 லிட்டரிலிருந்து 100 லிட்டராகவும், உயர்த்தி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

21. மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலகங்களை மேம்படுத்த 29 உதவி இயக்குநர்கள் (தணிக்கை) அலுவலகங்களுக்கும், 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும், துறையின் பிற அலுவலகங்களுக்கும் 416 படிப்பெருக்கிகள் (photocopiers) வழங்கப்படும். மேலும், 385 ஊராட்சி

ஒன்றியங்களுக்கும் நிகரி இயந்திரங்கள் (Fax machines) வழங்கப்படும். இதற்காக அரசு 2 கோடியே 92 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

22. கடலூர், தருமபுரி, தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் உதவி இயக்குநர்களுக்கு (துணிக்கை) புதிய அலுவலக கட்டிடங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் அமைக்கவும், சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலருக்கு முகாம் அலுவலகம் கட்டுவதற்கும், அரசு மொத்தம் 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

23. 1996–2001ம் ஆண்டுகளில் இதே அரசு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் முழுநேர மற்றும் பகுதி நேர எழுத்தர்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள், துப்புரவுப் பணியாளர்கள் ஆகியவர்களுக்கு சிறப்பு பொங்கல் கருணைத் தொகை (Special Adhoc Bonus) வழங்கப்பட்டு வந்தது. இடையில் முந்தைய ஆட்சியில் இது வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டது. இந்த ஆண்டு முதல் கருணைத் தொகையாக ஆண்டுக்கு தலா 300 ரூபாய் மீண்டும் வழங்கப்படும்.

24. இந்த அரசு, மே, **2006–**ல் பதவியேற்றபோது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அனைத்து பிரிவு பணியிடங்களிலும் அதிக எண்ணிக்கையில் காலி பணியிடங்கள் இருந்தன. இது திட்டங்களின் செயலாக்கத்தை வெகுவாக பாதித்தது. இதனால் இந்த அரசு காலிப் பணியிடங்களை நிரப்ப கீழ்க்கண்ட ஆணைகளை பிறப்பித்தது.

- தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் **30** உதவி இயக்குநர்கள், **187** உதவிப் பொறியாளர்கள், **1,001** இளநிலை உதவியாளர்கள் பணியிடங்கள் நிரப்புதல்.

- தொழில்நுட்ப கல்வித் துறை மூலம் **630** தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பணியிடங்கள் நிரப்புதல்.

- வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் **407** பணிப்பார்வையாளர்கள், **54** இளநிலை வரைவு அலுவலர்கள், **657** சாலை ஆய்வாளர்கள், **63** அலுவலக உதவியாளர்கள் பணியிடங்கள் நிரப்புதல்.

- கருணை அடிப்படையில் **402** இளநிலை உதவியாளர் முதல் அலுவலக உதவியாளர் வரையிலான காலிப் பணியிடங்கள் நிரப்புதல்.

- தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் கழகம் (TEXCO) மூலம் **202** இரவுக் காவலர் மற்றும் ஓட்டுநர் பணியிடங்கள் நிரப்புதல்.

- தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் 47 பணியாளர்களின் பணி நிரந்தரமாக்குதல்.

மக்கள் நலப் பணியாளர்கள் மற்றும் இதர பணியிடங்களையும் சேர்த்து இந்த அரசால் கண்டறியப்பட்ட 17,819 காலிப் பணிடங்களை நிரப்பிட உத்திரவு பிறப்பித்து, இதுவரை 13,999 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள 3,820 காலிப் பணியிடங்கள் இந்த ஆண்டு நிரப்பப்படும்.